* SRI M. NARAYANA KURUP :—" In 1954, they said that they would provide remedies by assigning to these people small bits of land or otherwise. They have not assigned any lands, but they seek to meet the situation by other means, that is, by making these people destitute. Therefore, it is a criminal negligence on the part of the Government. Facts were brought to their notice quite early and they promised to attend to it promptly, but they have not done so, as a result of which the people have been recently affected and, therefore, it is a very urgent matter; the people have no other remedy, as going to court or otherwise."

MR. SPEAKER :—" I wish to know what the Hon. Minister has got to say."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, this matter is neither urgent nor of recent occurrence. So far as the displaced persons are concerned, they have been given compensation and they have built their own houses. With regard to the land, steps have been taken to rehabilitate them. It is a matter of continuing nature. All things cannot be done all at once. Whatever that is necessary is being done. Every step is being taken to rehabilitate them. There is no difficulty in this matter."

MR. SPEAKER :—" I wish to know what the Hon. Minister himself who has given notice of this motion, I learn that it is not of recent occurrence. It has been there for a long time. It is not also a matter of public importance. I, therefore, rule the motion out of order."

(3) MERGER OF THE TAMIL-SPEAKING AREAS OF TRAVANCORE-COCHIN STATE WITH MADRAS STATE.

MR. SPEAKER :—" The next one is the motion given notice of by the hon. Member Sri P. Jeevanandam. It reads as follows :—

> 'This House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the failure of the State Government to make representations to the Government of the Indian Union to make a declaration assuring that the undisputed Tamil-speaking areas of the Travancore-Cochin State will be merged with the Madras State.'

I do not know how this is a matter of an urgent nature. Further how can this State Government make a statement about the affair of another State? I will give time to the hon. Member to say a few words to convince me as to how the motion is admissible under the rules of this House."

SRI P. JEEVANANDAM :—" கனம் அவைத் தலைவர் அவர்களே, இது இந்த சபை கவனிக்க வேண்டிய முக்கியமான பிரச்னை. அதற்குக் காரணம் பின் வருமாறு :—

" சரித்திர காலம் தொட்டு தமிழர்களும் மலையாளிகளும் சகோதரர்களாக வாழ்ந்து வந்தார்கள். இது எல்லோருக்கும் தெரியும். திருவாங்கூர் கொச்சி ராஜ்யம் சென்னை ராஜ்யத்திற்கு அடுத்தது. அங்கு தமிழர்களும் மலையாளிகளும் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு மக்களின் நிலைமை நன்மையாக நீடிக்க வேண்டும் என்றால், இந்த இரண்டு ராஜ்யங்களும் ராஜ்ய மக்களும் பலமாக இருக்க வேண்டும்

என்றால், ஒவ்வொருவரும் நண்பர்களாக வாழ வேண்டும். அங்கு சாந்தநிலைமை நீடிக்க வேண்டும் என்றாலும் இந்தியா பலமாக இருக்க வேண்டும் என்று சொன்னாலும் பல பாஷை பேசக்கூடிய மக்கள் ஒன்றாக இருந்து நண்பர்களாக வாழ வேண்டும். இப்பொழுது திரு கொச்சியில் நடந்து வரும் காரியம் நம்முடைய ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படக்கூடிய நிலையில் நடந்து வருகிறது. அங்குள்ள தமிழ் மக்களுக்கு இங்குள்ள சகோதர தமிழ் மக்கள் போய் உதவக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இதை நாம் கவலையுடன் கவனிக்க வேண்டும் என்று இந்த சட்டசபையை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒன்று.

"அடுத்தபடியாக அங்கே, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும் முனிசிபல் தலைவர்களும் பஞ்சாயத்து தலைவர்களும் பொதுஜன தலைவர்களும் மற்றும் பெரும்பாலான வர்கள் எல்லோரும் சேர்ந்து சிறைச்சாலைக்குச் செல்லுகிறார்கள். அதைக் கண்டு இங்குள்ள தமிழ் மக்கள் அவ்வளவு பேர்களும் கொந்தளிப்பு அடைந்து கொண்டிருக்கிறார்கள். மக்களின் கொந்தளிப்போடு மட்டும் நிற்கவில்லை. தமிழ் நாட்டிலிருந்து அங்கு போனவர்கள்கூட ஜெயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்த கொந்தளிப்பைக் கண்டு நமது ராஜ்ய சர்க்கார் அந்த மக்களுக்கு அவசியம் அக்கரை காட்டவேண்டும். ஏனென்றால் அவர்கள் மேல் நமக்கும் அக்கரை உண்டு. இலங்கைத் தமிழர்கள் பேரில் நமக்கு எவ்வளவு அக்கரை இருந்து இந்த சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்றினோமோ அதைப் போலவே அங்குள்ள மலையாள தமிழர்கள் பேரிலும் நமக்கு அக்கரை உண்டு என்பதைக் காட்டவேண்டும். அதனால் இந்த ராஜ்ய சர்க்கார் பொறுத்த வரையில்—மற்ற ராஜ்ய சர்க்காருக்கு அக்கரை இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை—நமக்கு அக்கரை உண்டு என்பதை இது போன்ற ஒரு பிரச்னை மூலம் காட்டவேண்டும். அங்குள்ள மக்கள் சுமுகமாக வாழ்வதற்கு நமக்கு அக்கரை உண்டு. இன்றைக்கு தகராறுகளுக்கு இடம் இல்லாமல் அங்குள்ள தமிழ் பிரதேசத்தை சென்னை ராஜ்யத்துடன் உடனடியாகச் சேர்க்கவேண்டும். அப்பொழுது தான் அங்கு ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும். இந்த இரண்டு ராஜ்யங்களும் உறவோடு வாழவேண்டும் என்றால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ளவேண்டும். மத்திய சர்க்கார் உடனடியாக இதை கவனிக்கும்படி இந்த சர்க்கார் சிபாரிசு செய்ய வேண்டும். இது ரொம்பவும் அவசியம். இந்த இரண்டு ராஜ்ய சர்க்கார்களும் ஒற்றுமையாக வாழ வைக்க மத்திய சர்க்காருக்கு பொறுப்பு உண்டு. மற்ற ராஜ்ய சர்க்கார்களைவிட இந்த ராஜ்ய சர்க்காருக்குத் தான் அதிகப்படியான பொறுப்பு இருக்கிறது. ஆகவே இந்த ராஜ்ய சர்க்கார் பலமாக சிபாரிசு செய்திருக்கவேண்டும். நமக்குள்ள உறவை காப்பாற்றவேண்டும். இந்த சர்க்கார் பண்டித ஜவஹர்லால் அவர்களுக்கு இந்த விஷயத்தைப்பற்றி வலியுறுத்தி சிபாரிசு செய்வதற்குத்தான் இந்த சட்ட சபைக்கு இந்த விஷயம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் அவசியமான விஷயம். ஆகவே இந்த விஷயத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இதை இந்த சட்ட சபைக்குக் கொண்டு வந்திருக்கிறேன்."

SRI P. RAMAMURTHI :—"இந்த அவசரப் பிரேரணையை இந்தச் சபை விவாதிக்கவேண்டியது ரொம்பவும் அவசியமா? அப்படி யானால் அப்படிப்பட்ட அவசரம் என்ன என்ற கேள்வி சபைக்கு முன் எழுந்திருக்கிறது. அதே சமயத்தில் இந்தச் சபைக்கு திருவாங்கூர் தமிழ் பிரதேசத்தை இந்த ராஜ்யத்துடன் இணைத்துவிடவேண்டுமென்ற சிபார்சு மத்திய அரசாங்கத்திற்குச் செய்ய அதிகாரம் உண்டு என்பதை யாரும் ஆட்சேபிக்கவும் இல்லை. அதை யாரும் மறுக்கவும் முடியாது. ஆனால் இது ஒரு அவசரப் பிரச்னையா என்ற கேள்வியை மாத்திரம் கிளப்பிவிட்டு, அதில் சர்க்காருக்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்று கேட்கப்படுகிறது. இன்று நேற்றைக்கு அல்ல. வெகு காலமாகவே திருவாங்கூர் ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டுள்ள தமிழ் பிரதேச மக்கள் 12-26 p.m.

மொழி அடிப்படையில் தங்கள் தாய்த் தாயகமாகிய சென்னை ராஜ்யத்தோடு இணைந்துவிடவேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பிக்கொண்டே வந்திருக்கிறார்கள். அதன்பேரில் கிளர்ச்சிகள் பலவும் நடந்துகொண்டே வருகின்றன. சில மலையாளிகள் அந்தக் கோரிக்கையை ஒப்புக்கொள்ளாமலுமிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய சர்க்காரிடம் ஏற்பட்ட அவநம்பிக்கையின் காரணமாக அந்தப் பிராந்தியத்திலுள்ள தமிழர்கள் எல்லோரும் சத்தியாக்கிரஹம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அது அங்குள்ள தமிழ் மக்களின் பிரச்னை மாத்திரம் அல்ல. அங்குள்ள மலையாள மக்களின் பிரச்னை மாத்திரம் அல்ல. சென்னை ராஜ்யத்திலும் தமிழர்கள் இருக்கிறார்கள். ஒரு மலையாள ஜில்லாவும் இருந்து வருகிறது. மலையாளிகளுக்கும், தமிழர்களுக்கும், அங்கே விரோதம் ஏற்படுமேயானால் அதன் எதிரொலி சென்னை ராஜ்யத்திலுள்ள தமிழர்களுக்கும், மலையாளிகளுக்கும் இடையே மூளவும் வசதி இருக்கிறது. நியாயமான முறையில் அவரவர்கள் அவரவர்களின் மொழி, கலாசார அடிப்படையில் ஒன்றுபட்டு வாழ வழிவகை செய்யவேண்டியது தான் சர்க்காரின் பொறுப்பு. அப்பொழுதே நாட்டில் அமைதி நிலவ வசதி ஏற்படும். அதை இந்தச் சர்க்கார் செய்யத் தவறிவிட்டது. இலங்கையில் வாழ்கின்ற இந்தியர் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்று இந்தச் சபை மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்ததுபோலவே இந்த திருவாங்கூர் தமிழர்களின் பிரச்னையையும் சுமுகமாக, நியாயமாகத் தீர்க்க எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்கவேண்டுமென மத்திய அரசாங்கத்திற்கு சென்னை சர்க்கார் சிபார்சு செய்திருக்கவேண்டும். அதைச் செய்யாததின் காரணமாக மக்களுக்கு இந்தச் சர்க்காரின்பேரில் அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. நாட்டிலும் பல கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன. இன்றையதினம் இப்படிப்பட்ட பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்றால் நாங்கள் ஒரு தீர்மான ரூபத்தில் இதைச் சபைக்குக் கொண்டு வந்திருக்கலாமென்றும் சொல்லலாம். ஆனால் ஒரு தீர்மானம் சபையில் வருவதற்கு 15 நாள் நோட்டிஸ் அவசியமானது. இந்தச் சபை சில நாட்களுக்கே தான் கூடப்போவதால் அந்தப் பதினைந்து நாள் நோட்டிஸ் என்பதை பிரத்யேக அதிகாரம் கொண்டு இவ்விஷயத்திற்காகத் தள்ளி வைத்தால் இந்த விஷயத்தைத் தீர்மான ரூபத்தில் கொண்டுவர எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் அதற்கும் சர்க்கார் கட்சித் தலைவர் சம்மதிக்கவில்லை. அவர் சொல்லுவதெல்லாம் மத்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை நியமித்திருக்கிறது என்றும் அது இவ்விஷயம்பற்றி பரிசீலனை செய்யும் என்றும் என்னிடம் குறிப்பிட்டார்."

Mr. SPEAKER :—" உங்களிடம் சொந்த முறையில் குறிப்பிட்டது எதையும் தாங்கள் இங்கே கூறக்கூடாது."

12-30 a.m.

Sri P. RAMAMURTHI :—" வந்தனம். மத்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை நியமித்திருக்கிறது என்றும் அது இவ்விஷயம் பற்றி பரிசீலனை செய்யக் கூடுமென்றும் சர்க்கார் கட்சித் தலைவர் சொல்லக்கூடும். ஆனால் அக்கமிஷன் இதைப்பற்றி விசாரிக்கும் என்பதற்குப் போதிய உத்திரவாதம் அளிக்கப்படவில்லை. ஆகவே தான் அப்பிராந்தியத்திலுள்ள தமிழர்கள் நம்பிக்கையை இழந்து நேரிடைப் போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள். அதனால் ஏற்படுகின்ற விபரீத விளைவுகளைப் பேப்பர்களில் நாம் பார்த்து வருகிறோம். இந்த மாதிரியான பிரச்னை, சண்டை சச்சரவுகள் இந்த மாகாணத்தில் மாத்திரம் ஏற்படவில்லை. திருவாங்கூர் கொச்சியில் மாத்திரம் ஏற்படவில்லை. இந்தியா பூராவிலும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். அதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் பல வருஷங்களுக்கு முன்பே ஒப்புக்கொண்ட ஒரு கொள்கையை தாங்கள் பதவிக்கு வந்தபின் ஏற்றுக்கொண்டு அமுலுக்குக்கொண்டு வராததின் விளைவாகத்தான். வங்காளத்திலும், பீஹாரிலும் பெரிய அளவில் இந்தப் பிரச்னை முற்றியிருக்கிறது. இதன் விளைவாக காங்கிரஸ் அக்கிராசனர் காங்கிரஸ்காரர்களுக்கே பல வேண்டுகோள் விடுக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அன்றைக்கு ஒப்புக்கொண்ட அடிப்படைக் கொள்கையை இன்

றைக்கு ஆட்சி பீடத்தில் ஏறியவுடன் ஒப்புக்கொள்ள மறுப்பதுதான் இவைகளுக்கு எல்லாம் காரணம். குறிப்பாக அன்றைக்கு 1948-ம் வருஷம் மகாத்மா காந்தி அவர்கள் இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னால் அதாவது ஜனவரி 25-ம் தேதி அன்று என்ன சொன்னார்கள் என்பதைப் படிக்கிறேன். நான் படிப்பது 'அகில இந்திய காங்கிரஸ் எக்கனாமிக் ரெவியு' என்ற பத்திரிகையில்தான் இருக்கிறது.

'The Congress had already accepted the principle of re distribution of provinces on a linguistic basis and had declared its intention to give effect to it constitutionally as soon as they come to power, as redistribution is conducive to the cultural advancement of the country.'

இந்தக் கொள்கையை இன்றையதினம் காந்திவாதிகள் என்று சொல்லக் கூடியவர்கள், காந்தி காட்டிய பாதையில் ஆட்சி புரிவதாகச் சொல்பவர்கள் ஒத்துக்கொண்டார்களா ? ஒத்துக்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்களா என்று நான் கேட்கிறேன். இதை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி எடுத்திருந்தால் இன்றைக்குத் தகராறு எதற்குமே இடமிருந்திருக்காது. அதை மத்திய அரசாங்கம் செய்யத் தவறியதால் பல விபரீத விளைவுகள் நாட்டில் உண்டாகின்றன. திருவாங்கூர், கொச்சி ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டுள்ள தமிழர்கள் சென்னை ராஜ்யத்தோடு சேரவேண்டுமென கிளர்ச்சி செய்கிறார்கள். அவ் விஷயம் நமக்குச் சம்பந்தப்பட்டது இல்லையென்று பம்பாய் சர்க்கார் வேண்டுமானால் சொல்லலாமே தவிர சென்னை சர்க்கார் விட்டேத்தியாக இருக்கமுடியாது. சிலோன் சர்க்கார் செய்யும் அக்கிரமத்தைக் கண்டித்து நாம் தீர்மானம் இயற்றினால், வேண்டுமானால் வெளிநாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகச் சொல்லலாம். திருவாங்கூர் தமிழர் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்வது நம்முடைய உரிமைக்கு உட்பட்டதே. அதை இந்தச் சர்க்கார் செய்யத் தவறியது சரியாகாது. ஆகையால் இதைப்பற்றி உடனே விவாதிக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாகுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்களும் இந்த அவசரப் பிரேரணையை அனுமதிப்பார்கள் என்றும் நம்புகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, the hon. Leader of the Opposition will pardon me if I say that he has made a most irrelevant speech as far as this adjournment motion is concerned."

SRI P. RAMAMURTHI ;—" நான் பேசியவைகள் பொருத்தமானதா, பொருத்தமற்றதா என்பதை நிர்ணயிக்க கனம் சபாநாயகர் அவர்கள் இருக்கிறார். பொருத்தமற்ற விஷயங்களை நான் சொல்லியிருந்தால் அவர் அதனை எடுத்துச் சுட்டிக்காட்ட முடியும்."

MR. SPEAKER :—" அவர் எனக்கு ஞாபகம்தான் மூட்டுகிறார். "

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Still I am entitled to comment on his speech. I still hold that view and I know he also agrees with me, that his was an irrelevant speech. He has made it with a purpose. The question is not whether we sympathise with the aspirations of the people in Travancore State or not; for, as far as that is concerned, perhaps we are no less sympathetic than the hon. Leader of the Opposition or any hon. Member sitting behind him. But the only question is what this Government can do in the matter under the circumstances and under the Constitution. If only the hon. Leader of the Opposition has taken care to see the provisions of the Constitution, I am sure, he will appreciate the position of this

Government, the embarrassing position of this Government. Perhaps he wants to take advantage of that embarrassing position and make a speech which will be advantageous to his own party in Travancore State—not even for the Tamil people in our own State, but for his own party purposes there. That is the whole difficulty. I am sorry I am unable to oblige him either by allowing a debate here or by agreeing to bring in a resolution waiving the period of notice for the purpose of advancing his party ends in Travancore State.''

Mr. SPEAKER :—'' I have heard both sides. The contention of the hon. Member who moved the motion is that this Government should interfere in the affairs of another State. That is not a fit matter for an adjournment motion. I therefore rule the motion out of order.''

III.—WALK-OUT FROM THE ASSEMBLY—STATEMENT OF THE LEADER OF THE OPPOSITION *RE*

Sri P. RAMAMURTHI :—" கனம் சபாநாயகர் அவர்களே, எந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும்கூட அந்தப் பிரச்னையை நாங்கள் எங்கள் கட்சியின் நலனுக்கே உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம் என்ற வழக்கமானதொரு பொய் வாதத்தைக் கிளப்பிவிட்டு சர்க்கார் கட்சித் தலைவர் தன்னுடைய கடமையினின்று தவறுவதோடுகூட பொறுப்பற்ற முறையில் பேசுகிறார். இன்றையதினம் திருவாங்கூர் தமிழர்களின் பிரச்னை மிக மிக முக்கியமானது. அலட்சியப்படுத்த முடியாதது. அதைப் பற்றி விவாதித்து மத்திய அரசாங்கத்திற்கு இந்தச் சர்க்கார் தனது சிபார்சுகளை அனுப்பாதது ஒரு குற்றம். அதோடு நாங்கள் கொண்டுவரும் அவசரப் பிரேரணையையும் புறக்கணித்து, தீர்மானமாகக் கொண்டுவந்து விவாதிக்கலாமென்றாலும் 15 நாள் நோட்டீஸ் அவகாசத்தை ரத்து செய்யவும் மறுத்து அந்தப் பிரச்னை சபையில் எழாதவாறே சர்க்கார் நடந்து கொள்வதன்காரணமாக அதை எதிர்க்கும் முறையில், மக்கள் எழுச்சிக்கு முரணாக நடக்கும் சர்க்கார் நடத்தைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் நாங்கள் சபையைவிட்டு வெளியேறுகிறோம்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—'' Sir, this is one of the tactics of the Communist Party . . .''

Sri M. KALYANASUNDRAM :—'' That is how the Government can escape.''

[The Leader of the Opposition followed by his Party Members walked out of the House.]

* The Hon. Sri C. SUBRAMANIAM :—'' We have to see and we have to scrutinize every action of theirs. Unfortunately, even though the Hon. Leader of the Opposition professes to function here in this House as a democratic party, every move of his is made only in the interests of his own party. That is the tragedy of the situation.''